


**27.08.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. நாடுமுழுவதும் விநாயகர் சதுர்த்தி இன்று பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது.

2. நாட்டின் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள ஆயுதப்படைகள் தயாராக இருக்கவேண்டியதன் அவசியத்தை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. தேசிய கல்விக்கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் தமிழக அரசின் புதிய கல்விக்கொள்கை அமைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. பீஹாரில் காங்கிரஸ் சார்பில் நடைபெறும் பேரணியில் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் இன்று பங்கேற்றார்.

5. பாரீசில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட போட்டிகளின் 2-வது சுற்று ஆட்டங்களில் இன்று **H.S.** பிரணாய், **P.V.** சிந்து உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>விநாயகர் சதுர்த்தி</u>

தமிழ்நாட்டில் விநாயகர் சதுர்த்தி இன்று பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப் படுகிறது.

இந்நாளை ஒட்டி, மாநிலத்தின் பல்வேறு விநாயகர் திருக்கோவில்களில் இன்று அதிகாலை முதலே சிறப்பு வழிபாடுகளும், பூஜைகளும் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோவிலில் சதுர்த்தி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தீர்த்தவாரி உற்சவம் இன்று நடைபெற்றது.

பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா இன்றிரவு நடைபெறும்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு மாணிக்க விநாயகர் திருக்கோவிலில் 150 கிலோ எடைகொண்ட கொழுக்கட்டை சுவாமிக்கு படைக்கப்பட்டது.

கோவை புலியக்குளம் முந்தி விநாயகருக்கு 4 டன் மலர்களால் ராஜஅலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் ஏலேல சிங்க விநாயகர் கோவிலில் 15 லட்ச ரூபாய் மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்ட விநாயகரை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

திருத்தணி முருகன் கோவிலுடன் இணைந்த சுந்தர விநாயகர் தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அருகம்புல், பழங்கள் உள்ளிட்டவைகளை படைத்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

சேலம் அருள்மிகு ராஜகணபதி திருக்கோவிலில் விநாயகருக்கு தங்க கவசம் சாற்றப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

நாமக்கல் பரமத்தி வேலூர் ஸ்ரீ பஞ்சமுக ஹேரம்ப மகா கணபதி ஆலயத்தில் 108 வலம்புரி சங்கு மற்றும் 1008 சாங்காபிஷேகம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திண்டுக்கல் வெள்ளை விநாயகர் மற்றும் கோபால சமுத்திரக்கரையில் அமைந்துள்ள கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

திருவாரூர் மாவட்டம் தர்ப்பணபுரியில் உள்ள ஆதிவிநாயகருக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

மக்கள் தங்களது வீடுகளை சுத்தம் செய்து, களிமண்ணால் செய்யப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளை வைத்து கொழுக்கட்டை, பொறிகடலை, பழங்கள் உள்ளிட்டவைகளை சுவாமிக்கு படைத்து சதுர்த்தி விழாவை கொண்டாடி வருகின்றனர்.

வியாகர்சதுர்த்தியை ஒட்டி கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் மலர்சந்தையில் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>விநாயகர் சதுர்த்தி வாழ்த்து</u>

இந்நாளையொட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் அனைவரின் வாழ்விலும் புதிய தொடக்கத்தை வகுத்து தடைகளை களைய வழிகோலட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம் செழிக்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் அனைவருக்கும் அனைத்து வளமும், மகிழ்வுடன் கூடிய ஆரோக்கியமும் கிடைத்திட தாம் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

## பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அரசு முறை பயணமாக ஜப்பான் சீனா நாடுகளுக்கு நாளை புறப்படுகிறார்.

15-வது இந்திய - ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் நாளைமறுநாள் பங்கேற்கும் பிரதமர் அந்நாட்டு பிரதமர் ஷிகரு இஸிபாவுடன் இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் முன்னெடுப்புகள் குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

அதனைத் தொடர்ந்து சீன டியான்ஜினில் வரும் 31-ம் தேதி தொடங்கி 2 நாட்கள் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 25-வது கூட்டத்தில் பங்கேற்கும் பிரதமர் அந்நாட்டு அதிபர் ஸீ ஜிங் பின்னுடன் கலந்தாலோசிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

## ராஜ்நாத்சிங்

நாட்டில் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள ஆயுதப் படைகள் தயாராக இருக்கவேண்டியதன் அவசியத்தை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய பிரதேச மாநில ராணுவ கல்லூரியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியஅவர், இந்தியா ஒருபோதும் போரை விரும்பியதில்லை என்றும், இருப்பினும் சவால்களை எதிர்கொள்ள ஏதுவாக பாதுகாப்பு தளவாடங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது என்றார்.

தொழில்நுட்ப மாற்றங்களை கருத்தில் கொண்டு ராணுவத்தின் பயிற்சி முறை மேம்படுத்தப் பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

## ஜீதேந்திர சிங்

ஜம்மு தாவி நதியின் நீர்மட்டம் குறைந்துள்ளதாகவும், அதேவேளையில் செனாப்நதி அபாய அளவை எட்டிவருவதாகவும் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் ராணுவம் விமானப்படை, மின்சாரத்துறை, நீர்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் முகாமிட்டுள்ளனர் என்றார்.

பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், இப்பணிகளை பிரதமர் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

## அமித்ஷா

பஹல்காம் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது ஆபரேஷன் சிந்தூர் மற்றும் ஆபரேஷன் மகாதேவ் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினரை மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இன்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்திய தடயவியல் ஆய்வகம் தொழில்நுட்ப ரீதியாக அதன் வலிமையை உலகிற்கு பறைசாற்றி உள்ளது என்றார்

நாட்டுமக்கள் அனைவரின் உள்ளங்களிலும் பாதுகாப்பு உணர்வை ராணுவத்தினர் வலுப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

எல். முருகன்

தேசிய கல்விக்கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் தமிழக அரசின் புதிய கல்விக்கொள்கை அமைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.
எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தேசிய கல்விக்கொள்கை தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும், அதனை மாநில அரசு எதிர்ப்பதாகவும் குறைகூறினார்.

❖❖❖❖❖❖❖

பேரணி

பீஹாரில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாக காங்கிரஸ் கட்சி சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி தலைமையில் தர்பங்காவில் நடைபெறும் பேரணியில் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் பங்கேற்றார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி உள்ளிட்ட பல்வேறு கட்சித்தலைவர்கள் இப்பேரணியில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் மகளிர் திட்டம் மற்றும் திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்தும் வேலைவாய்ப்பு முகாம் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ள இம்முகாமில் பல்வேறு தொழில்நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

18 வயது பூர்த்தியடைந்த 8, 10 12-ம் வகுப்பு, ஐடிஐ டிப்ளமா பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு முடித்த இளைஞர்கள் இதில் பங்கேற்கலாம்.

❖❖❖❖❖❖❖

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் திருவப்பூர், மங்கனூர், உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நாளை நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்ட தொழில் மையம் சார்பில் சுயவேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் 5 கோடி ரூபாய் வரை கடன் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று 6 ஆயிரத்து 871 கனஅடியாக குறைந்துள்ளது.

அணையிலிருந்து 12 ஆயிரத்து 850 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 119.65 அடியாகும்.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று அதிகாலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து ஒடிசா நோக்கி நகரக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

இதன்காரணமாக நீலகிரி, கோவை, உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

பாரீசில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட போட்டியின் ஆடவர் ஒற்றையர் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **H.S.** பிரணாய் - டென்மார்க்கின் ஆன்டர்ஸ் ஆன்டன்சனை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **P.V.** சிந்து – மலேஷியாவின் கருப்பத்தேவன் லெட்சனாவுடன் மோதுகிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ்கபிலா, தனிஷா கிறாஸ்டோ **Rohan Kapoor, Ruthvika Shivani Gadde** ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இன்று இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இணை – நியூசிலாந்து இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖